பெரிய தபாற் கந்தோரில் புதினப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது

# ஸ்ரீ லங்கா

தகவற்பகுதியின் வாராந்தப் பத்திரிகை

மலர் : 7 | 1963, மே 15 ந் திகதி | இதழ் : 8

# மின்னேரியா மின்சாரத்திட்டம்

## அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்

**விவசாய, காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் திரு. சி. பி. டி சில்வா இம்மாதம் 7 ம் திகதியன்று மின்னேரியா மின்சார நிலையத்தைத் திறந்துவைத்ததோடு மின்னேரியா—ஹிங்குறக்கொடை மின்சார விநியோகத்திட்டத்தையும் அங்குரார்ப்பணஞ் செய்து வைத்தார்.**

இச் சந்தர்ப்பத்தில் சொற் பொழிவாற்றிய அமைச்சர் மின்சாரத்தை நிலைக்களனாகக் கொண்டே கைத்தொழில் அபிவிருத்தி எழுப்பப்பட்டுள்ள தென்றும் ஒரு நாட்டின் அபிவிருத்தி மின்சார அபிவிருத்தியிலேயே தங்கியிருக்கிறதென்றும் கூறினர்.

மின்சக்தித் துறையில் பல்லாண்டுகாலமாக ஏற்பட்டுவந்துள்ள அபிவிருத்தியை விளக்கிக் கூறிய திரு. சி. பி. டி சில்வா அவர்கள் தொடர்ந்து பேசியதாவது :—" 1956 ம் ஆண்டு துவக்கம் மின்சார அபிவிருத்தி துரிதப்படுத்தப்பட்டுள்ளது. புதிய மின்சாரத்திட்டங்கள் அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் ஏற்கெனவேயுள்ள மின்சாரத்திட்டங்களும் கூடுதலான மின்சாரத்தை உற்பத்தி செய்யத்தக்கவைகளாக அபிவிருத்தி செய்யப்பட்டன. பாலத்துறை நீராவி மின்சார நிலையம் இப்பொழுது 50,000 கிலோவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றது. மஸ்கெலி ஓயா திட்டத்தின் மூலம் மேலதிகமாக இன்னும் 75,000 கிலோவாட் மின் சக்தி கிடைக்கும். 1965 ம் ஆண்டு இறுதியில் லக்ஸபான திட்டத்தின் II B கட்டம் பூர்த்தியானதும் மேலதிகமாக 50,000 கிலோவாட் மின்சக்தி கிடைக்கக் கூடியதாக இருக்கும். கல்லோயாவில் இப்பொழுது 10,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. தமன் கடுவையில் நிறுவப்பட்டுவரும் புட்டிப்பால் தொழிற்சாலையை இயக்க கல்லோயா மின்சாரம் வெகுவிரைவில் உபயோகிக்கப்படும். இன்னும் சில மாதகாலத்தில் உடவளவை பல்நோக்குத்திட்டத்தில் வேலை ஆரம்பமாகும். இத்திட்டம் 80,000 ஏக்கர் காணிக்கு நீர்ப்பாசன வசதியளிப்பதோடு மட்டுமல்லாமல் 50,000 கிலோவாட் நீர்மின் சக்தியையும் உற்பத்தி செய்யும். சமனல வேவாத்திட்டம் 120,000 கிலோவாட் நீர்மின் சக்திக்கும் அதிகமாக உற்பத்திசெய்யத் தக்கதாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது ".

மின்னேரியா மின்சார நிலையத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில் அமைச்சர் கூறியதாவது : " இப்பிரதேசத்துக்கான ஒரு பெரிய நீர் மின்சக்தித் திட்டத்தின் முதல் கட்டமே இது இப்பிரதேசத்திலுள்ள அரிசி ஆலைச் சொந்தக்காரர்கள் தங்கள் ஆலைகளை இயக்க மின்சாரத்தை உபயோகிப்பார்களென நம்புகிறேன். இப்போதுள்ளதிலும் பார்க்க விஸ்தீரணமான பிரதேசத்துக்கு மின்சாரம் விநியோகிக்கக் கூடியதாக மின்சார பரிமாற்றக் கம்பியிடும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். அரசாங்கம் ஹிங்குறக்கொடையில் நிறுவ உத்தேசித்திருக்கும் ஜவுளி ஆலைக்கு இத்திட்டத்திலிருந்தே மின்சாரம் விநியோகிக்கப்படும்."

அமைச்சர் அவர்களுக்கு முன் பேசிய அரசாங்க மின்சார முயற்சிகள் பகுதிப் பதில் தலைமை அதிபதி திரு. ஈ. பி. சுவான் கூறியதாவது : " மின்னேரியா மின்சாரத்திட்டம் மின்னேரியா குளத்தின் தண்ணீரை மின்சார உற்பத்திக்கு பயன்படுத்திக் கொள்ளும். 1,500 வருடங்களுக்கு முன் மகாசேன மன்னன் நீர்ப்பாசனத்தின் பொருட்டு கட்டிய குளத்தை, இலங்கை எஞ்சினியர்கள் அதே பிரதேசத்தை அபிவிருத்தி செய்தற்கு நீர்ப்பாசன மல்லாத பிற வேலைகளுக்கு உபயோகப் படுத்திக் கொள்கிறார்கள். வருடத்தில் பத்துமாத காலத்துக்கு இத்திட்டத்திலிருந்து நீர் மின் சக்தி கிடைக்கக் கூடியதாக இருக்கும். மின்சார விநியோகம் இதர இரண்டு மாதத்திலும் தொடர்ந்து கிடைக்கக் கூடியதாக மின்னேரியா நீராவி மின்சார நிலையம் உபயோகிக்கப்படும். மின்னேரியா திட்டம் இலங்கை எஞ்சினியர்களாலேயே பூரணமாக அமைக்கப்பட்டதால் அது தன்னிகரற்றதாக விளங்குகின்றது. இப்பிரதேசத்தின் அபிவிருத்துக்கு மின்னேரியா மின்சாரத்திட்டம் உதவி புரியுமென்பதில் எனக்கு எவ்வித சந்தேகமுமில்லை."

## மரக்கறி விதை உற்பத்தி

செம்மையான மரக்கறி விதைகள் கிடைக்கச் செய்யும் முயற்சிகளை ஒருமுகப்படுத்துதற்காக விவசாயப் பகுதியின் பிரதி அதிபர், விவசாயப் பகுதி ஆராய்ச்சித் துறையின் பிரதி அதிபர், மேற்கு ஜெர்மன் விவசாய நிபுணர், டாக்டர். ஷிமிட் ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவினை நிறுவுமாறு காணி, விவசாய, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் திரு. சி. பி. டி சில்வா உத்தரவிட்டுள்ளார்.

வேண்டிய மரக்கறி விதைகளை இங்கேயே திரட்டுதற்கு விவசாய இலாக்கா ஏற்கனவே முயற்சி மேற்கொள்ளத் தொடங்கிவிட்டது. இதனுல், மரக்கறி விதைகளை இறக்குமதி செய்தல் அவசியமற்றுப்போகும். வெளிநாட்டிலிருந்து எடுப்பிக்கும் மரக்கறி விதைகளை மாத்திரமன்றி, சுதேச மரக்கறி விதைகளையும் சேர்ப்பதற்கே இம்முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

அமைச்சர் தமது உத்தரவில், மரக்கறி விதை உற்பத்தி செய்வதற்கு உகந்த நிலையங்கள் நாட்டின் பல பாகங்களிலும் நிறுவப்படுவதுடன் குறிப்பாக அவ்வப்பகுதிக்கு ஏற்ற விதைகளையும், உற்பத்தி செய்ய வேண்டும் எனக் கேட்டுள்ளார். நஹுங்கல விவசாய நிலையம் போஞ்சி, வெங்காயம் போன்ற விதைகளை உற்பத்தி செய்யலாம் எனவும் அமைச்சர் ஆலோசனை கூறியுள்ளார். பெல்வெஹெர நிலையத்தில் தக்காளி விதையும், நுவெரெலியாவில் அல்லது அதற்கும் பார்க்க உயர்வான இடத்தில் ஒரு நிலையத்தை நிறுவி அதில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் விதைகளை உற்பத்தி செய்யலாம் எனவும் அமைச்சர் ஆலோசனை கூறியுள்ளார்.

# உட வளவைத் திட்டம்

## நீர்ப்பாசன மின்சார விருத்தி

**விவசாய, நில, நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சரின் சிபாரிசின் பேரில் 1963/64 ஆம் நிதியாண்டில் உட வளவை நீர்ப்பாசன, நீர் மின்திட்டத்தை மேற்கொள்வதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

செனுத்தற் கம்பிகளும் 50,000க்கு அதிமான ஏக்கர் நெல் காணிக்கும் 33,334 ஏக்கர் பீட பூமிக்குமான நீர்ப்பாசன வசதிகளும் உட்பட இத் திட்டத்துக்கு 135,000,000 ரூபா மொத்தமாகச் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

நேரகாலத்தோடு நிதி ஏற்பாடு செய்யும் படி அமைச்சர் சிபார்சு செய்ததன் காரணம் கல்லோயா அபிவிருத்திச் சபையிலுள்ள பயிற்சிபெற்ற உத்தியோகத்தர்களையும் சாதனங்களையும் பயன்படுத்துவதற்கு ஏதுவாக இருப்பதற்கேயாகும். கல்லோயா அபிவிருத்திச் சபை அதன் வேலைத்திட்டத்தை 1963/64 ஆம் ஆண்டின்போது பூர்த்தி செய்யும்.

இத்திட்டத்தின் முதலாண்டுக்குத் தேவைப்படும் 19,162,646 ரூபாவை, நிர்மாண வேலைகளைச் சாத்தியப் படுத்துவதற்கு விரைவில் கிடைக்கக்கூடியதாகச் செய்யப்படும்.

இம்மாபெரும் திட்டத்தின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் மண்வெட்டிப் புரட்டும் பெரிய சாதனத்தைக் கொண்டுள்ள கல்லோயா அபிவிருத்திச் சபை கூறும் அதன் வேலைகளமும், இவற்றைச் சேர்ந்த ஆளணிகளுடன் உடவளவை நீர்த்தேக்கத் திட்டத்துக்கு மாற்றப்படும் இது 1962/63 இல் ஆரம்பமாகும்.

23,611,840 ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ள அணைக்கரையை நிர்மாணித்தலும் ஆற்றைத் திருப்புதலுமான வேலைகளை கல்லோயா அபிவிருத்திச் சபை மேற்கொள்ள வேண்டுமென்றும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொங்கிறீட் ஈர்ப்பு அணைக்கட்டு, வழி நீர்வாயில், ஆற்றுப் போக்குவாய், மின்சார நீர் வழிகள், வாய்க்கால் தலைப்புகள், மின்சார உற்பத்தி நிலையங்கள், நீர் உருளை மின்சார உற்பத்தி யந்திர விசை நிலையம் முதலானவற்றின் நிர்மாண வேலை தொடர்பான இதர வேலைகளுக்கு எல்லா நாடுகளிலிருந்தும் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுவதோடு செலவாகும் தொகையில் எவ்வளவு பகுதியைக் கடனுகப் பெறமுடியுமென்பதைக் குறிப்பிடுமாறும் கேள்விப்

(4 ம் பக்கம் பார்க்க)

# புதிய பாடத்திட்டங்கள்

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகள் அனைத்திலும் ஒரே மாதிரியான தரம் ஏற்படச் செய்வதற்காகப் பாலர் கீழ் வகுப்பிலிருந்து, எட்டாம் வகுப்பு வரைக்குமுள்ள எல்லா வகுப்புக்களிலும் பாடத்திட்டங்களையும் வேலைத் திட்டங்களையும் மாற்றுவதெனக் கல்விப் பகுதி தீர்மானித்துள்ளது.

இத்தகைய மாற்றம் நீண்டகால அடிப்படையிலும் குறுகியகால அடிப்படையிலும் செய்யப்படும். குறுகிய காலத் திட்டத்தின்கீழ், பல்வேறு பாடங்களுக்கும் தற்போதுள்ள பாடத்திட்டங்கள் சிறிதே மாற்றப்படும். சூழற் கருமங்கள், நிர்மாணச் செயல்கள் போன்ற பாடங்களுக்குப் பாடத்திட்டம் இருக்கவில்லை. எனவே அவை புதிதாகத் தயாரிக்கப்படுகின்றன.

இப்புதிய பாடத்திட்டங்களைப் பெருவாரியான பாடசாலைகளில் பரீட்சார்த்தமாகப் பின்பற்றி, அவற்றை பற்றிய கருத்துக்களை தலைமையாசிரியர்களிடமிருந்து பெறும்படி கல்விப் பகுதியின் உதவி அதிபர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

# திருவெங்கைக் கோவை

திருவெங்கைக் கோவையின் ஆசிரியர் துறை மங்கலம் சிவப்பிரகாச அடிகள். இவரைக் கற்பனைக்கோர் களஞ்சியமென கற்றுவல்லோர் பாராட்டுவார்கள். அற்புதமான கற்பனைத்திறனும் அருள்வீறும் படைத்த சிவப்பிரகாச அடிகள் ஆக்கியருளிய திரு. வெங்கைக் கோவை புலவர்க்கோர் புதுவிருந்தாகப் பொலிகின்றது. அடிகளார்க்கு முன் பலகோவைகள் தமிழில் ஆக்கப் பட்டிருந்தன என்றாலும் அவைகள் ஒன்றிலும் காணப்படாத புதிய அமைப்புகளை அடிகள் தமது கோவை நூலில் மேற் கொண்டுள்ளார். இவர் தாம் ஆக்கியருளிய கோவையின் கடவுள் வாழ்த்துப் பாடலின் கண் சிறந்த கற்பனை ஒன்றை அமைத்துள்ளார்.

பூவை மலர்நிறத் தெம்பெரு மாட்டி பொருப்பரையன்
பாவை வளர்க்குங் கிளிமுன்கை யாளொரு பான்மருவுங்
தேவை வளர்ச் சடைத் தென்வெங்கை வாணனைச் சேர்ந்துவருங்
கோவை படர்வதற் குள்ளூன்று வா மொற்றைக் கொம்பரையே

இதன் கண் வருகின்ற "கோவை படர்வதற் குள்ளூன்று வாமொற்றைக் கொம்பரையே" என்னும் ஈற்றடியில் அமைந்துள்ள கற்பனைவிருந்து தமிழ் இலக்கியப் படைப்பில் மிகமிகப் புதுமையானதாகும். கோவை என்னும் செடி படர ஒரு கொளு கொம்பை ஊன்றுவோம் என்னும் பொருளும் தாம் பாடிய கோவை இலக்கியம் தமிழ் கூறு நல்லுலகம் முழுதும் பரவிப் புலவர் பாராட்டும் பெற்று வாழும்வண்ணம் ஒற்றைக் கொம்பையுடைய ஞானச் செல்வராகிய பிள்ளையாரை உள்ளத்தில் ஊன்றி நினைத்திடுவேன் என்னும் பொருளும் அமைந்திருத்தலைக் காண்க. இதனால் கோவை படரக்கொம்பு ஊன்றிய கற்பனைக் கோமான் என பாவலர்கள் அன்றும் இன்றும் அடிகளைப் பாராட்டி வருகின்றார்கள். இத்துடன் கோவை கொம்பைப் பற்றிப் படர்வதுபோல தலைவி தலைவனை கொழுனனைப் பற்றியே வாழ்தற்குரியவள் எனவும் ஆன்மா இறைவனுகிய கொழுகொம்பைப் பற்றியே பிறவிப் பயனை அடைதற்குரியது எனவும் குறிப்புப் பொருள் கொள்ளத்தக்கதாய் இருப்பதையும் நோக்குக.

இனி பாங்கனின் துணையினுல் இடந் தலைப்பாடு பெற்று தலைவியைப் புணர்ந்து இன்பந்துய்ந்த தலைவன் தான் நுகர்ந்த இன்பத்தைப் பாராட்டும்போது

மடலு மணமு மெனவே நிறைவெங்கை வாணர்தமைத்
தொடலு மடியர் பெறும்பே றென விவ டோண்மருவி
உடலு முயிரு மனமுமே லாம் வளர்ந் தோங்குமின்பக்
கடலு ளழுந்தி யவசமுற் றேதையுங் கண்டிலமே.

எனக் கூறுகின்றார். இதில் தலைவியின் நலத்தைத் தான்நுகர்ந்து அடைந்த இன்பப் பேற்றை திருவெங்கைவாணரின் திருவடிக்கு ஆளான மெய்யடியார்கள் பெற்றுவக்கும் பேரின்பப்பேற்றுக்கு ஒப்பாகக் கூறுகின்றான். வெங்கை வாணர்தமைத் தொடலுமடியர் பெறும் பேறென இவள் தோள் மருவி உடலும் உயிரும் மனமும் எல்லாம் வளர்ந்து ஓங்கும் இன்பக் கடலில் அமிழ்ந்தி அவசமுற்று எதையுங் கண்டிலமே என்னும் தொடர்களில் அமைந்துள்ள பொருள் செறிவும் ஈடுபாடும் அடிகளின் பேரின்ப வேட்கையையும் கருத்தொருமித்த காதல் வாழ்வின் சிறப்பையும் எடுத்துக் காட்டுகின்றன.

உடலு முயிரு மனமுமேலாம் வளர்ந் தோங்குமின்பக்
கடலு ளழுந்தி யவசமுற்றுறேதையுங் கண்டிலமே

எனும் இச் செய்யுள் பகுதியுடன்

ஐந்து பேர் அறிவுங்கண்களே கொள்ள அளப்பருங் கரணங்கள்
நான்கும், சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும் திருந்து சாத்துவிகமே
ஆக, இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த எல்லையில் தனிப்பெருங்
கூத்தின், வந்தபேர் இன்பவெள்ளத் துள் திளைத்து மாறிலாமகிழ்ச்சியில் மலர்ந்தார்.

எனவரும் சேக்கிழார் அடிகளருளிய செய்யுளையும் ஒப்பிட்டு நோக்குக.

பாங்கி தலைமகளின் அவயவங்கள் ஓவியத்தில் தீட்டுதற்கரியன என்னும் பொருள் பொதிய தலைவனுக்கு எடுத்துரைப்

## வித்துவான் க. வேந்தனுர்

பதாக வரும் துறைபற்றி அடிகள் ஆக்கிய ஒருசெய்யுளில் அமைந்துள்ள பொருட் சிறப்பும் கற்பனை வளமும் மிக மிக அற்புதம் உடையனவாக விளங்குகின்றன.

மந்தா கினியணி வேணிப்பி ரான்வெங் கை மன்னவநீ
கொந்தார் குழன்மணி மேகலை நூனுட் பங் கொள்வதெங்ஙன்
சிந்தாமணியுந் திருக்கோவையு மெழுதிக் கொளினும்
நந்தா வுரையை யெழுதலெவ் வாறு நவின்றருளே.

இச்செய்யுளில் மணிமேகலை நூனுட் பங் கொள்வதெங்ஙன் எனவரும் தொடருக்கு மணிகள் கோத்த மேகலை அணிந்த நூலைப் போல விளங்கும் தலைவியின் இடையென்றும் மணிமேகலை என்னும் பெயரை உடைய நூலின் நுட்பப் பொருள் எனவும் இரண்டு கருத்து அமைய கூறலாம். இனி சிந்தாமணியும் திருக்கோவையு மெழுதிக் கொளினும் என்னும் தொடருக்கு முறையே குன்றுத கண்மணியென்றும் அழகிய கண்ணை என்றும் பொருள்கொள்ளக் கிடப்பதுடன் சிந்தாமணி திருக்கோவை என்னும் இரு நூல்களையும் என்று பொருள் கொள்ளலாம். நந்தாவுரையையெழுதலெவ்வாறு என்னும் தொடருக்கு இனிமைகுறையாத தலைவியின் மொழிகளை எங்ஙனம் ஓவியத்தில் தீட்டலாமெனவும் சிந்தாமணிக்கும் திருக்கோவை யாருக்கும் முறையே நச்சினுக்கினியர் உரைத்த உரையின் சிறப்பையும் பேராசிரியர் உரைத்த உரையின் சிறப்பையும் எங்ஙனம் எழுதினுல் எழுதிக்காட்டமுடியும் எனவும் பொருள் கொள்ளலாம். இங்ஙனம் சிந்தாமணி திருக் கோவையார் மணிமேகலை என்னும் நூல்களின் பெயரை தலைவியின் அணிகலத்தோடும் உறுப்புக்களோடும் இணைத்துப் பொருள் கொள்ளும்படி அமைத்துப் பாடிய அடிகளாரின் கற்பனைத் திறன் போற்றத் தக்கதாகும்.

இனி தோழி தலைவனுடன் செல்ல உடன்பட்டு எழுந்த தலைவிக்கு பாலைவனத்தின் கொடுமையைக் கூறியபொழுது தலைவி அதற்குக் கூறும்விடையாக அமைந்துள்ள ஓர் செய்யுள் வாயிலாக தலைவியின் சிறந்தகற்பின் மாண்பை அடிகள் மிகத் திறம்பட விளக்கியுள்ளார்.

மாவோ வெனுங் கறைக் கண்டர் வெங்கேசர் மணிவரைமேல்
எவோ வெனுங் கண்ணிளங்கொடியே மத னெய்யு நறும்
பூவோ புயல் வெண்மதியோ கனிகொ ளும் பூங்குயில் வாழ்
காவோ விறைவருடனே புகுங்கள்ளிக் காடெனக்கே

இச்செய்யுளில் தன் ஆருயிர் தலைவனுடன் சேர்ந்து செல்லும் பொழுது கள்ளிகள் நிறைந்ததும் கனலினும் கொடிய வெப்பத்தை உடையதுமான அப்பாலைவனம் காதற் கடவுளாகிய மன்மதன் கரும்பு வில்லில் தொடுத்து அம்புகளாகச் செலுத்தும் மணங்கமழும் மலரைப் போலவும் தண் ஒளியை வீசும் வெண்ணிலாத் தரும் இன்பம் போலவும் தேன்சுவைக் கனிகள் தூங்குவதும் பூங்குயில் இருந்து வாழ்வதுமாகிய பூச்சோலையைப் போலவும் தனக்கு இன்பம் தருமென தலைவி கூறுகின்றாள். இதன் கண் தலைவி தன்னை முழுதும் தலைவனுக்கே உரிமையாக்கி அவன் அன்பு நீழலில் தங்கித் தானே அவனுய் வாழ்கின்ற பேரன்பின் திறத்தை அடிகள் அப்படியே எடுத்துக் காட்டியுள்ளார்.

கடுங்கதிர் வெம்மையிற் காதலன் றனக்கு
நடுங்குதுய ரெய்தி நாப்புலர வாடித்
தன்துயர் காணுத் தகைசால் பூங்கொடி
யின்றுணை மகளிர்க் கின்றியமையாக்
கற்புக் கடம் பூண்ட வித்தெய்வமல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண்டில மால்

என இளங்கோ அடிகள் கண்ணகியின் கற்பை எடுத்துக் காட்டும் செய்யுள் பகுதியுடன் சிவப்பிரகாச அடிகள் கூறும் இச்செய்யுள்ப் பகுதியையும் ஒப்பிட்டு நோக்குக. கண்ணகி தன் துன்பத்தைக் காணுது தன் தலைவன் துன்பத்தைக் கண்டு வருந்துகின்றாள். கோவையில் கூறப்படும் தலைவி தன் தலைவனுடன் கூடிச் செல்லும் உவகையினுல் கொடிய பாலை வனத்தை பூவாகவும் வெண்மதியின் தன் ஒளியாகவும் குயில் வாழும் பூங்காவாகவும் காண்கின்றாள்.

பரிவு இகந்த மனத்து ஒரு பற்று இலாது
ஒருவு கின்றனை ஊழி அருக்கனும்
எரியும் என்பது யாண்டையது ? ஈண்டு நின்
பிரிவினும் சுடுமோ, பெருங்காடு ? என்றாள்

எனவரும் சீதையின் மாற்றத்தையும் ஒப்பிட்டு நோக்குக

இனி சுவடு கண்டிறங்கல் என்னும் தொடரில்வரும் செய்யுளில் அடிகளார் புதிய உவமானங்களை எடுத்து ஆண்டுள்ளார்.

மலியோதியினிசைவண்டு பண்பாடுறும் வஞ்சியடி
கலியோ முனஞ்செலும் வெள்ளடி யோடு கலந்ததுவே.

இதன் கண் வரும் வஞ்சியடி என்பதற்கு வஞ்சிக்கொடி போலும் இடையினை உடைய தலைவியின் சிறிய அடியென்றும் அல்லது வஞ்சிப்பாவுக்கு உரிய சிந்தடி குறள்அடி எனவும் வெள்ளடியோடு கலந்து என்பதற்கு வெண்பாவிற்குரிய அளவடியோடு வஞ்சிப் பாவிற்குரிய குறளடி சிந்தடி முதலியன கலந்தென்றும் தலைவனடி பெரிதாயும் தலைவயினடி சிறிதாயும் இருத்தலால் அவையிரண்டும் கலந்து என்றும் பொருள் தருகின்றன. இதில் வெண்பாவின் அளவடி தலைவனின் பெரிய அடிகளுக்கும் வஞ்சிப் பாவின் குறளடியும் சிந்தடியும் தலைவியின் சிறிய அடிகளுக்கு உவமையாகக் கொள்ளப்பட்டன. தலைவனும் தலைவியும் அச்சத்தினுல் ஒருவரோடொருவர் நெருங்கிக் கெடுதியைத் தரும் பாலைவனத்தின் வழியாகச் செல்லும் போது தலைவனின் பெரிய அடிகளும் தலைவியின் சிறிய அடிகளும் கலந்து காணப்பட்டன என்பதைக் கூற வந்த அடிகளார் வஞ்சியடி கலியோ முனஞ் செலும் வெள்ளடியோடு கலந்ததுவே எனக் கற்பனை கலின் பொலிய கூறும் சிறப்பு பாராட்டற்குரியதாகும். இதன் கண் அளவடியும் சிந்தடியும் கலந்து வந்த கலிப்பாவைப் போல் என பிறிதோர் பொருள் தோன்றியதையும் காண்க.

இனி அடிகளார் திருக் குறளைப் பல இடங்களில் எடுத்தாண்டுள்ள அருமை போற்றத்தக்கதாகும். ஓதற் பிரிவு பற்றி விண்ணுடையார் புகழ் எனத் துவங்கும் செய்யுளில்

கண்ணுடையார் கற்றவரேகல்லார் கண் முகத்திரண்டு
புண்ணுடை யாரெனக் கூறி நங்காதலர் போயினரே.

இதன் கண் கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு

புண்ணுடையர் கல்லாதவர் என்னுங் குறளையும் பரத்தையில் பிரிந்து வந்த தலைவனை ஏற்றுக் கொள்ள வேண்டுமென தோழி தலைவியைக் கேட்டுக்கொண்டதாக வரும் செய்யுளில்

இன்னு செய்தாரை யொருத்திடினன்மை யியற்று கெனச்
சொன்னுர் புலவரறிந்திலையோ

என இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல் என்னும் குறளையும் தலைவன் உடன்போக்கு மறுத்தல் என்னும் துறையில்

அனிச்சமு மன்னத்தின் றூவியு மாதரடி மலர்க்குச்
சனித்த நெருஞ்சிப் பழமென்றறிந்தும்

என அனிச்சமும் அன்னத்தின் தூவியும், மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம் என்னும் குறளையும் எடுத்தாண்டுள்ளார்.

இங்ஙனம் கற்பனை வளமும் முன்னோர் நூலின் முடிவை எடுத்தாளும் திறனும் மெய்கண்ட நூற்பொருள்களையும் செய்யுள் உறுப்புக்களையும் ஆங்காங்கு எடுத்தாண்டு தமது கோவையை அணிசெய்துள்ள நுண்மாண் நுழைபுலச் செவ்வியும் எண்ணுந்தொறும் எண்ணுந்தொறும் இன்பம் தருவனவாகும். இங்ஙனம் புலமைநலம் படைத்த சிவப்பிரகாசம் அடிகளார் சோணசைல மாலை நிரோட்டகயமகம், திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கையுலா, திருவெங்கையலங்காரம் பிரபுலிங்கலீலை, பழமலையந்தாதி, பிட்சாடன நவமணி மாலை, கலம்பகம், நன்னெறி, சிவநாமமகிமை, அபிடேக மாலை, கண்ணப்பச் சுருக்கம், நக்கீரச்சுருக்கம் என்னும் நூல்களை ஆக்கி தமிழ் மொழியையும் சைவத் திருநெறியையும் வளம்படுத்தியுள்ளார்.

அ. தொழிற் பகுதி

# 1. சம்பளச் சபைச் சட்டம்

**ஊழியருக்குச்** செல்லுமதியான சம்பளப்பாக்கியை அறவிடுதற்குரிய காலவெல்லையை 2 ஆண்டு காலத்திலிருந்து 4 ஆண்டாக நீடிக்கும் திருத்தமொன்று சம்பளச்சபைச் சட்டத்திற் செய்யப்பட்டு, 17.6.62 ந் தேதியன்று சட்டமாகியது. ஏற்கெனவே சட்டத்திலுள்ள ஒழுங்குவிதியின் பிரகாரம் கடந்த 2 ஆண்டு காலத்திற்குரிய சம்பளக்குறைவை மட்டும் அறவிடக்கூடியதாயிருந்தது. இத்திருத்தம் செய்யப்பட்டதோடு, கடந்த 4 ஆண்டு காலத்திற்குரிய சம்பளக்குறைவை அறவிடக்கூடியதாயிருக்கும். ஆயினும், இத்திருத்தத்தை நன்கு பயன்படுத்திச் சட்டநடவடிக்கை யெடுப்பதாயின், 1964 ம் ஆண்டு ஜூன் மாதம் 17 ந் தேதிக்குப்பின்னரே அத்தகைய நடவடிக்கை யெடுக்க முடியும்.

எமது முந்திய வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மெத்தைத்தும்பு, சிலிர்த்த தும்பு ஏற்றுமதித் தொழில், உறைநீர், வளிநீர் உற்பத்தித்தொழில் ஆகியவற்றிற்குரிய சம்பளச்சபைகள், குறைந்தவலச் சம்பள வீதங்கள், மேலதிகச்சம்பள வீதங்கள், விடுமுறைநாட்கள் ஆகியன பற்றித்தீர்மானங்கள் செய்துள்ளன. இத்தீர்மானங்கள் முறையே 1962 ம் ஆண்டு ஜூலை மாதம் 1 ந் தேதியன்றும், 1963 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ந் தேதியன்றும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. 1962 ம் ஆண்டில் எமது முந்திய வெளியீடு பிரசுரிக்கப்பட்ட பின், புதிய சம்பளச்சபையொன்று நூல்நூற்றல், நெசவு செய்தல், (கால்மேசு, உள்ளுடை ஆகியவற்றின் உற்பத்தி உட்பட) உடைகள் உற்பத்தித் தொழிலுக்கு 1962 ம் ஆண்டு மே மாதம் 1 ந் தேதியன்று அமைக்கப்பட்டது. இச்சபையைக் கலைத்து, கால்மேசு, உள்ளுடை உற்பத்தித் தொழிலுக்கும், உடைகள் உற்பத்தித் தொழிலுக்கும் தனித் தனிச் சபைகள் இரண்டை அமைக்க வேண்டுமென்னும் யோசனை பரிசீலனை செய்யப்பட்டுவருகிறது. இப்பொழுது மொத்தம் 23 சம்பளச்சபைகள் இருக்கின்றன. (சிகரெட்புகையிலையுட்பட சகலவகைப் புகையிலையையும் பயிரிடல், பதப்படுத்தல், விற்பனவு செய்தல் ஆகியன உட்பட) புகையிலைத் தொழிலுக்கு அத்தொழிலிலுள்ள வேலையாளரின் வேலை நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் ஒழுங்குபடுத்தும்பொருட்டு, சம்பளச்சபையொன்றை நிறுவுதற்கும் ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

மோட்டார்ப் போக்குவரத்துத் தொழிலிலுள்ள வேலையாளர் இனங்களுடன் மற்றும் சில இனங்களைச் சேர்த்துக்கொள்ளும்பொருட்டு, சம்பளச் சபை செய்துள்ள வேலைப் பாகுபாட்டைத் திருத்தியமைக்க வேண்டுமெனக் கனம் மந்திரி தீர்மானிக்கவே, குறித்த உத்தேசத்திற்கு ஆட்சேபனைகளைகோரும் அறிவித்தலொன்று 1962 ம் ஆண்டு செப்றெம்பர் மாதத்தில் வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்டது. நமது வெளியீடு அச்சிடப்படுகையில் குறித்த உத்தேசத்தைச் சட்டமாக இயற்றுதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

கள்ளு, சாராய, வின்னரித் தொழிற் சம்பளச்சபை சம்பந்தமாக இதுபோன்ற பிரச்னையொன்று இப்பொழுது இப்பகுதியாற் கவனிக்கப்பட்டுவருகிறது.

(சம்பளச்சபைச் சட்டத்தின் 16 ம் பிரிவின்கீழ்) றப்பர் வளர்த்தலும் பதப்படுத்தலும் தொடர்பாய தொழிற் சம்பளச் சபை நடத்திய விசாரணையொன்றின் இறுதியில், " கள்ளுச்சீவுவோர் " என்னும் பதத்தை திருத்தவேண்டுமென்னும் யோசனையைச் சபை நிராகரித்தது. இப்பொழுது நடைமுறையிலுள்ள சொற்பொருள் விளக்கத்தின் பிரகாரம் கள்ளுச்சீவுவோரின் கடமைகளிற் சிலவற்றை நீக்கும் நோக்கத்துடனேயே இந்த யோசனை சமர்ப்பிக்கப்பட்டது.

கள்ளு, சாராய, வின்னரித் தொழிலிலுள்ள வேலையாளரின் குறைந்தவலச் சம்பள வீதங்களை அதிகரித்தற்கான சில பிரேரணைகளை விவாதிக்கும்பொருட்டு குறித்த சம்பளச்சபையின் கூட்டமொன்று நடத்தப்பட்டது. குறித்த பிரேரணைகள்பற்றி முடிவு செய்யுமுன்பாக கலால் அதிபரிடமிருந்தும், தேசிய அமைப்புத்திட்ட அதிபரிடமிருந்தும் இவைபற்றிய அறிக்கைகளைப்பெறுதல் வேண்டுமெனச் சபை தீர்மானித்தது.

கறுவாத்தொழிலிலுள்ள தொழிலாளருக்குப் பட்டை உரித்தற்குரிய துண்டு வீதத்தைத் அதிகரித்தற்குச் சில தற்காலிக தீர்மானங்களைச் சம்பந்தப்பட்ட சம்பளச்சபை செய்தது. இத்தீர்மானங்களுக்கு ஆட்சேபனைகள் இப்பொழுது கோரப்பட்டுள்ளன.

தென்னந்தோட்டங்களில் வேலைபார்க்கும் கண்டக்றர்களுக்குக் குறைந்தவலச் சம்பள வீதமொன்றை நிர்ணயிக்கும் விடயம் தென்னை வளர்த்தற் தொழிற் சம்பளச்சபை முன்னிலையில் ஒரு பிரேரணையாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக சம்பள அமைப்புப்பற்றி தகவல் பெறுதற்குப் பல்வேறு பருமன்களையுடைய தோட்டங்களின் கண்டக்றர்களுக்கு இப்பொழுது வழங்கப்படும் சம்பள வீதங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமெனச் சபை தீர்மானித்திருக்கிறது.

தேயிலை வளர்த்தலும் பதப்படுத்தலும் தொடர்பாய தொழிற் சம்பளச் சபை மற்றும் பல விடயங்களுடன், சாதாரண வேலைநாள் பற்றிய ஏற்பாடுகள் காவலாளருக்கு இயைபுடையனவாக இருத்தலாகாதென்றும், பாலர்பண்ணைச் சேவகர், சுத்திகரிப்புத் தொழிலாளர், மலக்கூடத் தொழிலாளர் ஆகியோருக்கு வாராந்தர விடுமுறைநாள் கொடுக்கப்படலாகாதென்றும் கோரும் பிரேரணையொன்றையும் ஆலோசித்தது. இப்பிரேரணையின் முழுவிளைவுகளையும் அங்கத்தவர்கள் கவனமாக ஆராய வசதியளிக்கும்பொருட்டு இப்பிரேரணையின் ஆலோசனையை ஒத்திவைக்கவேண்டுமெனச் சபை விவாதித்த பின் முடிவுசெய்தது.

கலப்பற்றுக்காரரின் இனங்களைத் திருத்தியமைக்கும் சில யோசனைகளை இயந்திரத்தொழிற் சம்பளச்சபை இப்பொழுது ஆராய்ந்து வருகிறது. செங்கல், ஓடு ஆகியன உற்பத்திசெய்யும் தொழிலாளருக்கு 7 அரசாங்க விடுமுறை நாட்கள் கொடுக்க வேண்டுமென்னும் பிரேரணை குறித்த தொழிலுக்குரிய சம்பளச்சபையால் ஆலோசிக்கப்பட்ட விருக்கிறது.

## II—கடை, காரியாலய ஊழியர் சட்டம்

இரண்டு ஆண்டு காலத்திற்குரிய சம்பளக்குறைவுகள், மேலதிக நேரச் சம்பளம் முதலியவற்றிற்குப்பதிலாக நான்கு ஆண்டுகளுக்குரிய சம்பளக்குறைவுகள் முதலியவற்றை அறவிடும்பொருட்டு சட்ட நடவடிக்கையெடுத்தற்கு வசதிசெய்யும் திருத்தச்சட்டமொன்று கொண்டு வரப்படுவதாக முந்திய ஆண்டு வெளியீட்டிற் கூறப்பட்டிருந்தது. இத்திருத்தச் சட்டம் 1962 ம் ஆண்டு ஜூன் மாதம் 16 ந் தேதியன்று சட்டமாகியது. ஆயினும், இச்சட்டத்தின்கீழ் செல்லுமதியான பணத்தொகைகளை அறவிடுதற்கு 1964 ம் ஆண்டு ஜூன் மாதம் 17 ந் தேதியின்பின்னரே நடவடிக்கையெடுக்க முடியும். கொள்ளுப்பிட்டித் தொகுதியிலுள்ள கடைகளின் சொந்தக்காரரும் ஊழியரும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, கொழும்பிலுள்ள பிரதான குடியிருப்புப் பகுதிகளில் வசிப்போர் தமக்குத் தேவைப்படும் பொருள்களை வாங்க வசதியளிக்கும் முகமாக கொழும்பு நகரசபையின் கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தைத் தொகுதிகளிலுள்ள கடைகளுக்குரிய மூடும் நேரங்கள் மாற்றப்பட்டபோதிலும், இம்மாற்றம் செய்யப்படுமுன் கொள்ளுப்பிட்டித் தொகுதியிலுள்ள கடைகளுக்கு இயைபுடையனவாயிருந்த அதே மூடும் நேரங்களையே மீண்டும் நடை முறைக்குக் கொண்டுவர நடவடிக்கையெடுக்கப்பட்டுவருகிறது.

அனுராதபுரப் புதிய நகர் அமைக்கப்பட்டதோடு, அனுராதபுரப் பட்டினசபையின் முந்திய நிருவாகவெல்லைகளுக்குட்பட்ட கடைகளுக்கு இயைபுடைய மூடும் கட்டளை நடைமுறையிலிருந்து நீங்கியது. எனவே, இப்பகுதியிலுள்ள கடை ஊழியர் மூடும் கட்டளையொன்று அளிக்கும் பயனை இழந்தனர். இந்நிலைமையைத் திருத்தும்பொருட்டு, மூடும் கட்டளையைத் திருத்தியமைத்துக் கடைகளிருக்கும் புதிய நகரின் பகுதிக்கு இக்கட்டளையை இயைபுடையதாக்க இப்பொழுது நடவடிக்கை யெடுக்கப்பட்டுவருகிறது.

தங்காலை, பெலியத்தை பட்டினசபைப் பகுதி, இரு நிருவாகப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு தங்காலைப் பட்டினசபை, பெலியத்தை பட்டினச்சபை என்று அழைக்கப்பட்டதுடன் தங்காலை, பெலியத்தைப் பட்டினசபைப் பகுதியின் நிருவாக எல்லைக்குட்பட்ட கடைகளுக்கியைபுடைய மூடும்கட்டளையும் நடைமுறையிலிருந்து நீங்கியது. மூடும் கட்டளையைத் தங்காலைப் பட்டினசபைப் பகுதியில் மட்டும் அமுல் நடத்தும்பொருட்டு, அக்கட்டளையைத் திருத்தியமைத்தற்கு இப்பொழுது நடவடிக்கையெடுக்கப்பட்டுவருகிறது.

ஜாயலைப் பட்டினசபையின் கோரிக்கைக் கிணங்க அதன் எல்லைகளுக்குட்பட்ட கடைகளுக்கு இயைபுடைய மூடும் நேரங்களை மாற்ற இப்பொழுது நடவடிக்கை யெடுக்கப்பட்டுவருகிறது.

மாத்தளைப் பட்டினசபைப் பகுதிக்குட்பட்ட மயிர் கத்தரிச்சாலைகள், சலவைச்சாலைகள், உலர்சலவைக்கடைகள், சாயமூட்டு கடைகள் ஆகியவற்றிற்கு இப்பொழுது இயைபுடைய மூடும்நேரங்களை மாற்றும் பொருட்டு, மூடும் கட்டளையைத் திருத்தியமைத்தற்கும் நடவடிக்கை யெடுக்கப்பட்டுவருகிறது.

இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட வேலையின் தன்மையையும் அளவையும் கீழ்க்கண்ட புள்ளிகள் குறிப்பனவாகும்.

**பார்வையீடுகள் :**

குறித்தாண்டில் 5668 கடைகளும், 345 காரியாலயங்களும் பார்வையிடப்பட்டன. இவற்றுள் 4803 கடைகளும், 267 காரியாலயங்களும் முதன்முறையாகப்பார்வையிடப்பட்டன.

219 கடைகளும், 26 காரியாலயங்களும் முறையீட்டின்பேரில் பார்வையிடப்பட்டன

கடைகளில் வேலைபார்க்கும் 13537 ஊழியரினதும் காரியாலயங்களில் வேலை பார்க்கும் 2144 ஊழியரினதும் வேதனப் பதிவேடுகள் சரிபார்க்கப்பட்டன.

இப்பார்வையீடுகளின் விளைவாக ஊழியருக்குக் கிடைத்த பணத்தொகைகள் பின்வருமாறு :—

மேலதிகநேரச் சம்பள விடையத்திற் கண்டுபிடிக்கப்பட்டு அளவிடப்பட்ட சம்பளக்குறைவுகள் :

| | | | கடைகள் | காரியாலயங்கள் |
|---|---|---|---|---|
| கண்டுபிடிக்கப்பட்டவை | (அ) பாதிக்கப்பட்ட தொழிலாளரின் தொகை | .. | 1395 | 73 |
| | | | ரூ. ச. | ரூ. ச. |
| | (ஆ) பணத்தொகை | .. | 162,776 67 | 20,215 79 |
| அறவிடப்பட்டவை | (அ) தொழிலாளரின் தொகை | .. | 804 | 33 |
| | (ஆ) அறவிடப்பட்ட தொகை | .. | 67,664 17 | 6,128 07 |

வாராந்த விடுமுறைகள் சம்பந்தமாகக் கண்டுபிடிக்கப்பட்டு அறவிடப்பட்ட சம்பளக் குறைவுகள் :

| | | | கடைகள் | காரியாலயங்கள் |
|---|---|---|---|---|
| கண்டுபிடிக்கப்பட்டவை | (அ) பாதிக்கப்பட்ட தொழிலாளரின் தொகை | | 695 | 152 |
| | | | ரூ. ச. | ரூ. ச. |
| | (ஆ) பணத்தொகை | .. | 45,867 63 | 8,880. 99 |
| அறவிடப்பட்டவை | (அ) தொழிலாளரின் தொகை | .. | 376 | 179 |
| | (ஆ) அறவிடப்பட்ட தொகை | .. | 33,631 79 | 9,797 45 |

ஆண்டு விடுமுறைகள் சம்பந்தமாகக் கண்டுபிடிக்கப்பட்டு அறவிடப்பட்ட சம்பளக்குறைவுகள் :

| | | | கடைகள் | காரியாலயங்கள் |
|---|---|---|---|---|
| கண்டுபிடிக்கப்பட்டவை | (அ) பாதிக்கப்பட்ட தொழிலாளரின் தொகை | .. | 1419 | 434 |
| | | | ரூ. ச. | ரூ. ச. |
| | (ஆ) பணத்தொகை | .. | 71,023 44 | 27,365 37 |
| அறவிடப்பட்டவை | (அ) தொழிலாளரின் தொகை | .. | 1220 | 476 |
| | (ஆ) அறவிடப்பட்ட தொகை | .. | 56,133 37 | 32,869 78 |

அரசாங்க விடுமுறைகள் சம்பந்தமாகக் கண்டுபிடிக்கப்பட்டு அறவிடப்பட்ட சம்பளக்குறைவுகள் :

| | | | கடைகள் | காரியாலயங்கள் |
|---|---|---|---|---|
| கண்டுபிடிக்கப்பட்டவை | (அ) பாதிக்கப்பட்ட தொழிலாளரின் தொகை | .. | 1171 | 58 |
| | | | ரூ. ச. | ரூ. ச. |
| | (ஆ) பணத்தொகை | .. | 16,909 05 | 1,565 19 |
| அறவிடப்பட்டவை | (அ) தொழிலாளரின் தொகை | .. | 693 | 11 |
| | (ஆ) அறவிடப்பட்ட தொகை | .. | 70,737 81 | 209 54 |

விதிக்கப்பட்ட குறைந்தவலை வீதங்கள் சம்பந்தமாகக் கண்டுபிடிக்கப்பட்டு அறவிடப்பட்ட சம்பளக்குறைவுகள் :

| | | | கடைகள் | காரியாலயங்கள் |
|---|---|---|---|---|
| கண்டுபிடிக்கப்பட்டவை | (அ) பாதிக்கப்பட்ட தொழிலாளரின் தொகை | .. | 61 | 18 |
| | | | ரூ. ச. | ரூ. ச. |
| | (ஆ) பணத்தொகை | .. | 5,276 19 | 17,291 41 |
| அறவிடப்பட்டவை | (அ) தொழிலாளரின் தொகை | .. | 70 | 5 |
| | (ஆ) அறவிடப்பட்ட தொகை | .. | 5,107 92 | 3,681 53 |

கடை, ஊழியருக்கு ரூ. 233,275 சதம் 06 தொகையும் காரியாலய ஊழியருக்கு ரூ. 526,86 சதம் 37 தொகையும் சம்பளக்குறைவுக ளென்ற முறையில் அறவிடப்பட்டுக் கொடுக்கப்பட்டன.

**கடை, காரியாலய ஊழியாருக்கு வசதிகள்.**—மத்தியானச் சாப்பாட்டறை வசதிகள், வெளிச்சம், காற்றோட்டம் ஆகியவற்றை ஒழுங்குசெய்யும் விடயத்தில்

[4 ம் பக்கம் பார்க்க]

# இலங்கை வானொலி நிகழ்ச்சிகள்

**16.5.63 தொடக்கம் 19.5.63 வரை**

## தேசிய ஒலிபரப்பு

### வியாழன் மே 16

காலை

6-45 உதய கீதம்‡
6-50 சைவ நற்சிந்தனை—மீனாட்சி பொன்னுத்துரை
6-55 இஸ்லாமிய நற்சிந்தனை எஸ். ஐ. வை. மவுலானா
7-00 செய்திகள்
7-10 அறிவிப்புகள்
7-15 தேர்ந்த இசை†
7-45 திரை இசை†
8-15 இஸ்லாமிய கீதம்†
8-30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12-00 சித்ரகானம்†
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 கதம்ப இசை†
1-30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5-00 **சிறுவர் பகுதி**— பிறந்த தின வாழ்த்துக்கள்
5-15 ஓடிவிளையாடு பாப்பா
5-45 திரை இசை†
6-00 செய்திகள்
6-10 விலைவாசிகள்
6-15 **கிராமசஞ்சிகை**— உணவுப் பெருக்கம் கிராமியச் சித்திரம்
6-45 வாத்ய கோஷ்டி
7-00 பேச்சு—" நாம் வாழும் உலகம் (1) இ. வைத்திலிங்கம்
7-15 நேயர் விருப்பம்†
7-45 தொடர் நாடகம்—" **மனோரஞ்சிதம்** "— பதினைந்தாம் இதழ் " **சந்தேகம்** " கிருஷ்ணா—எழுதியது
8-00 **முஸ்லிம் நிகழ்ச்சி**—கிருஅத்†
8-15 திருக்குர்ஆன் விளக்கப்பிரசங்கம்— மௌலவி பீ. கே. எம். அப்துல் காதர்
8-45 பாட்டு—எஸ். மீராசாஹிப்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-15 கவிக்கோவை
9-30 குரல்வகை
10-00 **தமிழோசை**—பி. பி. ஸி. நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்ட நிகழ்ச்சிகளின் ஒலிப்பதிவு
10-30 ஒலிபரப்பு முடிவு

### வெள்ளி மே 17

காலை

6-45 பாமாலை—
6-55 இஸ்லாமிய நற்சிந்தனை† எஸ். ஐ. வை. மவுலானா
7-00 செய்திகள்
7-10 அறிவிப்புகள்
7-15 தோத்திரப் பாடல்கள் நாகபூஷணி இரத்தினம்
7-45 திரை இசை†
8-15 இஸ்லாமிய கீதம்†
8-30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12-00 சித்ரகானம்†
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 கதம்ப இசை†
1-30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5-00 **சிறுவர்பகுதி**—பிறந்ததின வாழ்த்துக்கள்
5-15 நாகசுரம்†
6-00 செய்திகள்
6-10 விலைவாசிகள்
6-15 **கிராம சஞ்சிகை**—தேசவளம் திருக்குறள் வகுப்பு
6-45 வீணை—
7-00 **ஞானாஞ்சலி**—
7-30 நேயர் விருப்பம்
8-00 **முஸ்லிம் நிகழ்ச்சி**—அரேபிய சங்கீதம்
8-15 நாடகம்—" **துன்பக்கேணி** " ஓ. எச். ஆப்தீன் எழுதியது
8-45 இஸ்லாமிய கீதம்†
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-15 விமர்சனம்
9-30 கதாப் பிரசங்கம் இரா. சிவ அன்பு
1-15 இசையமுதம்
1-30 ஒலிபரப்பு முடிவு

### சனி மே 18

காலை

6-45 உதய கீதம்‡
6-50 சைவ நற்சிந்தனை மீனாட்சி பொன்னுதுரை
6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை வண. யேம்ஸ் மேதர்
7-00 செய்திகள்
7-10 அறிவிப்புகள்
7-15 மூவர் இசை
7-45 திரை இசை†
8-15 இஸ்லாமிய கீதம்
8-30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12-00 சித்ரகானம்
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 கதம்ப இசை
1-30 ஒலிபரப்பு. முடிவு

மாலை

5-00 **சிறுவர் பகுதி**—பிறந்ததின வாழ்த்துக்கள்
5-15 இளைஞர் மன்றம்
5-45 திரை இசை†
6-00 செய்திகள்
6-10 விலைவாசிகள்
6-15 **கிராம சஞ்சிகை**—சனசமூக நிலையம்
6-45 வயலின்—ஜி. சண்முகானந்தம்
7-15 **கண்டதும் கேட்டதும்**—செய்திச் சுருள்
7-30 நேயர் விருப்பம்†
8-00 **முஸ்லிம் நிகழ்ச்சி**—மலாய்ப் பேச்சு (மறுஒலிபரப்பு)
8-15 பேச்சு—" கலைத்துறையில் முஸ்லிம்கள் " எம். டீ. முஹம்மத்
8-30 பாட்டு—கில்வா அப்துல் காதர்
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-15 பேச்சு—திவ்வியப் பிரபந்தம் (1) அ. செ. சுந்தரராஜ ஐயங்கார்
9-30 பாட்டு—எம். வர்ணகுல சிங்கம்
10-30 ஒலிபரப்பு முடிவு

### ஞாயிறு மே 19

காலை

6-45 பாமாலை†
6-55 கிறிஸ்துவ நற்சிந்தனை— வண,. யேம்ஸ் மேதர்
7-00 செய்திகள்
7-10 அறிவிப்புகள்
7-15 தேர்ந்த இசை†
7-45 திரை இசை†
8-15 தமிழ்மூலம் சிங்களம் மறுஒலிபரப்பு
8-30 **ஞானாஞ்சலி**— (மறுஒலிபரப்பு)
9-00 இஸ்லாமிய சமய பாடசாலை—நடத்துபவர் இஸட். எல். எம். முஹம்மத்
9-30 திரை இசை
10-00 ஒலிபரப்பு முடிவு

பகல்

11-30 சிறுவர் மலர்—தயாரிப்பு : வானொலி மாமா
12-15 நேயர் விருப்பம்
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 **மாதர் பகுதி**—1. உலக நாடுகளிற் பெண்கள்—பேச்சு அ. ஜுலிஸ்பிள்ளை 2. விபத்தும் முதலுதவியும்— பேச்—டாக்டர் பதமா முத்துஸ்வாமி 3. உங்கள் கேள்விகள்
1-30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5-00 **சிறுவர் பகுதி**— பிறந்ததின வாழ்த்துக்கள்
5-15 பாட்டு‡
5-45 திரைக் குரல்
6-00 செய்திகள்
6-10 குரல்வகை
6-30 தாளவாத்ய கச்சேரி—வி. அம்பலவாணர்—மிருதங்கம், ஏ. சந்தான கிருஷ்ணன்—கஞ்சிரா, கே. கே. அச்சுதன்—கடம்
7-00 மாதர் கேட்டவை
7-30 பாட்டு—பிஸ்கா சிவகுமாரன்
8-00 **முஸ்லிம் நிகழ்ச்சி**—மணிமொழிகள், மௌலவி எம். ஐ. அப்துல் லத்தீப்
8-15 மாணவர் மன்றம்—தோரையாய அரசினர் முஸ்லிம் வித்தியாலயம்
8-30 நேயர் கேட்டவை†
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-15 நாடகம்—" **கொழுகொம்பு** " வி. ராஜரத்தினம் எழுதியது (மறுஒலிபரப்பு)
9-45 நிலையஒலிப்பதிவுகள்†
10-30 ஒலிபரப்பு முடிவு

## சம்பளச் சபை...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிது சீர்திருத்தம் காணப்பட்டுள்ளது. பார்வையிடப்பட்ட 4803 கடைகள், 267 காரியாலயங்கள் விடயத்தில் கீழே புள்ளிகள் தரப்பட்டுள்ளன :

| | கடைகள் | காரியாலயங்கள் |
|---|---|---|
| (அ) போதிய கழுவும் வசதிகளையுடையன .. | 3,736 .. | 278 |
| (ஆ) போதிய சுகாதார வசதிகளையுடையன | 3,843 .. | 297 |
| (இ) போதிய மத்தியானச்சாப்பாட்டறை வசதிகளையுடையன .. .. | 3,570 .. | 156 |
| (ஈ) போதிய வெளிச்சமும் காற்றோட்டமும் உடையன .. .. | 4,144 .. | 296 |

**அரசாங்க விடுமுறைகள்**

முந்திய ஆண்டுகளிற்போலவே இவ்வாண்டிலும் கடை, காரியாலய ஊழியர் சட்டத்திற்குட்பட்ட ஊழியரின் அரசாங்க விடுமுறைநாட்கள் 7 லிருந்து 9 ஆக அதிகரிக்கப்பட்டன. போசன் பௌர்ணமி தினமாகிய 1963 ம் ஆண்டு ஜூன் மாதம் 6 ந் தேதியும் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த தினமாகிய 1963 ஆண்டு செப்றெம்பர் மாதம் 26 ந் தேதியும் மேலதிக விடுமுறைநாட்களாகப் பிரகடனஞ் செய்யப்பட்டு, அரசாங்க வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டன.

## உடவள....

(1 ம் பக்கத் தொடர்)

பத்திரகாரர்கள் கேட்டுக் கொள்ளப் படுவார்கள்.

இது தொடர்பாக பிரான்சு, கனடிய மேற்கு ஜேர்மன் அரசாங்கங்கள் ஏற்கனவே விசாரணைகள் செய்துள்ளன. நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதிலும் வெளிநாட்டுச் செலவுக்கான பணத்தை அளித்தலிலுமுள்ள தங்கள் ஆர்வத்தை இவைகள் எடுத்துக் காட்டியுள்ளன.

உட வளவை மின்சார அணைக்கட்டு வேலையும் பலாங்கொடை ஐலண்ட் கிறிட்) மின்சார வேலையும் உடனடியாக ஆரம்பிக்க படவேண்டுமெனவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அப்போது தான் மின்சார உற்பத்திக்கு வேண்டிய விலைமிக்க டீசல் யந்திரங்களையும் அவற்றுக்கான எண்ணெய்யையும் வாங்குவதைத் தவிர்த்து வேலைத்தலம், முகாம், பயன்படுத்தும் யந்திரங்கள் முதலானவற்றிற்கு வேண்டிய மின்சாரத்தைச் சுலபமாகப்பெறலாம்.

முடிவு செய்யப்பட்டுள்ள இதர விடயங்கள் வருமாறு :—

*நீர்த்தேக்கத்தை நிர்மாணிக்கும் அதே சமயத்தில் வலது பக்கத்துக் கரையையும் இடது பக்கத்துக்கரையையும் நிர்மாணிப்பதற்கும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படவேண்டும்.

*தொழிலாளர் முகாம்கள், பதவியினர்களுக்கான வீடுகள், நிருவாகக் கட்டிடங்கள், வீதிகள், மற்றும் இதர வசதிகள் ஆதியவற்றை நிர்மாணிப்பதற்கான கேள்விப்பத்திரங்களை நீர்ப்பாசனப் பகுதி உடனடியாகக் கோர வேண்டும். இம்முழுத்திட்டத்தின் நிர்மாண வேலைகள் 1963 நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு பத்து வருட காலத்தில் செய்து முடிக்க ஒழுங்குசெய்யப்படும்.

உங்கள் பணத்துக்கு
அதிகம்

கைத்தொழிற் பொருட்காட்சி

சுவீப்

210 பரிசுகள்

ஒவ்வொரு மாதமும்

1963, பெப்ருவரி மாதம் 14 ந் திகதி
துவக்கம் மாதம் இருமுறை
சீட்டிழுப்பு

ரிக்கற் ஒன்றை வாங்கி
பரிசு ஒன்றைப் பெறுங்கள்

இலங்கை, வாளைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ஆர் 9787—5,008 (5/63)